மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 24

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. வறுமை, செல்வம் இரண்டையும் ஒன்றாகக் கருதும் பற்றற்ற நிலையை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்
    1. எழுமையும் தொடரும் உழுவலன்பு
    2. குற்றங்களைந்து குணங் கொள்ளல்
    3. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்
    4. ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்

02. மஞ்சு, பஞ்சு, அஞ்சு, நஞ்சு இங்கு இடம் பெற்றுள்ள சொல்லணி
    1. சிலேடை 2. மடக்கு 3. மோனை 4. எதுகை

03. ஒரு சொல் இருபொருள் தருவதாக அமைவது
    1. இரட்டைக்கிளவி 2. சிலேடை 3. உவமை 4. இணைமொழி

04. மனுநீதிச் சோழமன்னன் பாரபட்சமின்றி நீதியான ஆட்சி புரிந்தான் இக்கூற்றுக்குப் பொருத்தமான உவமைத் தொடர்
    1. சிலையில் எழுத்துப் போல
    2. கொழுகொம்பற்ற கொடி போல
    3. சமன் செய்து சீர்தூங்குங் கோல் போல
    4 கலங்கரை விளக்கு போல

05. சிறுவன் சீரம் சிறப்புமாக வாழ்ந்தான். இங்கு சீருஞ் சிறப்பும் என்பதற்கு எதிர்ப் பொருளாகவமையும் இன்னோர் இணைமொழி
    1. கூனிக்குறுகி 2. கலகல 3. வாடிவதங்கி 4. ஆடிப்பாடி

பகுதி 2

பின்வரும் வினாக்களுக் சுருக்கமாக விடை எழுதுக

1) இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில் உயிர்வாழ்வதற்கு இலட்சியத்தை கைவிடும் நிகழ்வு எதனுடன் ஒப்பிடப்படுகின்றது.?

2) அறிவிலிகளுடன் நட்புக்கொள்வது இனியது என வள்ளுவர் குறிப்பிட காரணம் யாது?

3) “அரவுயர்ந்தோன் கொடுமையிலும் முரசுயர்ந்தோய் நின்அருளுக்கு அஞ்சினேன்”
    1. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது.
    2. அரவுயர்ந்தோன், முரசுயர்ந்தோன் என குறிக்கப்படுபவர்கள் யாவர்?

4) பிற உயிர்களைத் தம் உயிரில் கண்ட சமநெறிச் செல்வர் அவர்
    1. இங்கு அவர் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
    2. அவரின் இலட்சியம் யாது?

5) “மடப்பாவை தன்வரமும் என்வரமும் வழுவாவண்ணம் கோடுகின்ற மொழியவன்பால் எனைத்தூது..”
    1. மடப்பாவை, கோடுகின்ற மொழியவன் என குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
    2. இப்பகுதி யாரால் யாருக்கு கூறப்பட்டது?

6) “அனுபவம் பழுத்து அவவிடம் தேஜஸ் சட்டென தெரியும்”
    1. அவ என குறிப்பிடப்படும் கதாபாத்திரம் யார்?
    2. இப்பகுதி இடம்பெறும் பாடப்பரப்பு யாது?